I-56 AE

கழக வெளியீடு-சக

பதினெண் -
கீழ்க்கணக்கு

களவழி நாற்பது

பொய்கையார்
இயற்றியது

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
எழுதிய உரையுடன்

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TINNEVELLY JULY 1924 & MADRAS

PRICE AS 5.

III-55.

கழக வெளியீடு-சக

பதினெண் கீழ்க்கணக்கு

பொய்கையார்

இயற்றிய

களவழி நாற்பது

இது

திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் காலேஜ்
தலைமைத் தமிழாசிரியர்
ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

எழுதிய

உரையுடன்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: & சென்னை
இரக்தாட்சி ஆடி மீ

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,
:: *Tinnevelly and Madras* ::
July 1924

71174

[*Copyright Registered*]

முகவுரை

களவழி நாற்பது என்பது கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இறையனாரகப்பொருளுரையிற் கடைச்சங்கப் புலவர் பாடியவற்றைக் கூறிவருமிடத்தே கீழ்க்கணக்குகள் குறிக்கப்படவில்லையேனும், பின்னுளோர் பலரும் அவையும் சங்கத்தார் பாடியனவென்றே துணிந்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினேண் கீழ்க்கணக்கு என எண்ணிவருகின்றனர். கீழ்க்கணக்கியற்றியோருட் கபிலர், கண்ணஞ்சேந்தனார், கூடலூர் கிழார், பொய்கையார் முதலாயினோர் சங்கத்துச் சான்றோரென்பது ஒருதலையாகலின் அவற்றுட் பலவும் அக்காலத்தின வென்பதில் இழுக்கொன்று மின்று. கீழ்க்கணக்கு நூல் பதினெட்டென்பது, தொல்காப்பியச் செய்யுளியலில்

'வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே யடிநிமிர் பின்றே'

என்னுஞ் சூத்திரவுரைக்கட் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைக்குமாற்றா னறியப்படுவது. அவை அம்மை யென்னும் வனப்புடைய வாதலும் அவ்வுரையாற் றெளியப்படும். பழைய பனுவல்களை அளவு முதலியனபற்றி மேற்கணக் கெனவும் கீழ்க்கணக் கெனவும் பின்னுளோர் வகைப்படுத்தனராவர்.

'அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்'

என்பது பன்னிருபாட்டியல்.

கீழ்க்கணக்கு நூல் பதினெட்டாவன: நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியது நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை யைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன.

இதனை,

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு'

என்னும் வெண்பாவா னறிக. இதில் 'நால்' என்பதனை 'ஐந்திணை' என்பதன் முன்னுங் கூட்டி நாலைந்திணை யெனக் கொள்ளவேண்டும். சிலர் இன்னிலையை விடுத்துக் கைந்நிலையை ஒன்றாக்குவர். வெண்பாவின் சொற்கிடக்கை முறை அதற்கேற்றதன்றாங்க. சிலர் ஐந்திணையை ஐந்து நூலெனக் கொண்டு இன்னிலை, கைந்நிலை இரண்டனையும் ஒழித்தல் செய்வர். அவர், 'திணைமாலை' என்பதொரு நூல் பழையவுரைகளாற் கருதப்படுவ துண்டாகலின்

அதுவே ஐந்திணையுட் பிறிதொன்றாகு மென்பர். 'ஐந்தொகை' 'இன்னிலைய' 'மெய்ந்நிலைய' 'கைந்நிலை யோடாம்' 'நன்னிலையவாம்' என் றிங்ஙனம் பாட வேற்றுமையும் காட்டுவர்.

இனி, களவழி நாற்பது என்னும் இந்நூலையியற்றி னார் நல்லிசைப் புலவராகிய பொய்கையா ரென்பார். இவர் இது பாடியதன் காரணம் இந்நூலிறுதியில் இதன் பழைய உரையாளரால் எழுதப்பட்டிருக்கும் தொடரால் விளங்கும். அது, 'சோழன் செங்கணா னும் சேரமான் கணைக்காலிரும் பொறையும் (திருப்?) போர்ப் புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறை வைத்துழிப் பொய்கை யார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது முற்றிற்று' என்பது.

இச் செய்தி, கலிங்கத்துப்பரணி இராசபாரம் பரியத்தில்

'களவழிக் கவிதை பொய்கையுரை செய்யவுதியன்
கால்வழித் தளையை வெட்டியர சிட்டவனும்'

என்றும், விக்கிரம சோழனுலாவில்

'மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்'

என்றும் குறிக்கப்பட்டுளது.

சோழனொருவன் ஓர் சேரமன்னனை வென்ற வெற்றிச் சிறப்பைப் பாடியதே களவழி நாற்பது என்பதற்கு இதன் கண்ணேயே சான்றுகள் உள்ளன. செய்யுள்தோறும் சோழனது வென்றி கூறப்படுதல் வெளிப்படை. அவன் 'செங்கண்மால்' 'செங்கட்சின மால்' என்று பல பாடல்களிற் குறிக்கப்படுதலின் அவனது பெயரும் பெறப்படுவதாயிற்று. 'கொங் கரையட்ட களத்து' என்றும், 'வஞ்சிக்கோ வட்ட களத்து' என்றும் வருதலின், வெல்லப்பட்டோன் சேரனென்பது போதருவதாயிற்று. 'காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்' என்கையால் வென்று கொண்ட இடம் கழுமலம் என்பதாயிற்று.

புறநானூற்றிலே,

'குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே' (செய்யுள் - எச)

என்னுஞ் செய்யுளின் கீழ் வரையப்பட்டுள்ள குறிப்பால், செங்கணனொடு பொருதான் சேரமான்கணைக்கா லிரும்பொறை யென்பது தெரிகின்றது. அது, 'சேரமான்கணைக்கா லிரும்பொறை சோழன் செங் கணனொடு போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்

பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்பது. 'குழவிபிறப்பினும்' என்னும் இச் செய்யுள், தமிழ்நாவலர் சரிதையில்,

'சேரன் கணைக்கா லிரும்பொறை செங்கணாற் குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய் கையாருக் கெழுதி விடுத்த பாட்டு' என்னும் தலைப் பின் கீழ்க் காணப்படுகிறது. செய்யுளின் பின்னே, 'இது கேட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடச் செங்கணான் சிறைவிட் டரசளித்தான்'. என்று குறிக்கப் பெற்றுளது. இங்ஙனம் இரு குறிப்பும் வேறுபடுவதன் காரணம் புலப்படவில்லை. இவ் விரண்டினுள்ளே புறநானூற்றுக் குறிப்பே வலியுடைய தென்று கொள்ளின், அது பரணி, உலா முதலிய வற்றுடன் முரணுமைப் பொருட்டு, துஞ்சினான் கணைக்கா லிரும்பொறையாகச் சிறைவீடு செய் தரச ளிக்கப்பட்டான் பிறனொரு சேரனவன் என்று கொள்ளவேண்டும். சேரமான்கோக்கோதைமார்பனைப் பொய்கையார் பாடிய இரண்டு பாட்டுக்கள் புறநானூற் றில் உள்ளன. நற்றிணையில் அவர் பாடிய பாட்டு ஒன்றும் அவனைக் குறிப்பிடுகின்றது. அவ்வேந்தன் கணைக்கா லிரும்பொறையின் வேறாகிச் சோழனாற் சிறைப்பட்டவனாயின், அவனை விடுவித்தற்குக் களவழி நாற்பது பாடப்பட்டதென்று கோடல் அமையும்.

இனி, சிலர் நல்லிசைப் புலவராகிய பொய்கையாரையும், திருமாலடியாருள் ஒருவராகிய பொய்கையாழ்வாரையும் ஒருவராகக்கொண் டுரைத்துப் போந்தனர். அது திரிபுணர்ச்சியின்பாற் பட்டதென்பதும், சங்கத்துச் சான்றோரை ஆழ்வாராக்குதற்கு ஒரு சிறிதும் இயைபின்றென்பதும் செந்தமிழ்ச் செல்வி இரண்டாஞ் சிலம்பினுள் 'பொய்கையார்' என்னும் தலைப்பின்கீழ் யானெழுதிய கட்டுரையா னறிக.

கடைச்சங்கப் புலவருள் ஒருவராகும் பொய்கையாராற் பாடப்பட்ட இந்நூல் கி. பி. 250-ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டதாகா தென்பது ஒருதலை. களவழி கொண்ட சோழன் செங்கணானைக் கரிகாலனுக்கு முன் வைத்துக் கூறுகின்றது பரணி. உலாவானது கரிகாலனை யடுத்துப் பின்வைத்தோதுகிறது. இவற்றுள் எது உண்மையாயினும் செங்கணான் கடைச் சங்கநாளில் விளங்கிய மன்னன் என்பதில் இழுக் கொன்று மில்லை. அவன் கழுமலங்கொண்டமை களவழியானும், வெண்ணியினும், அழுந்தையினும் ஏற்ற மன்னரை வெற்றிகொண்ட செய்தி திருமங்கையாழ்வாரியற்றிய பெரிய திருமொழியிலுள்ள திருநறையூர்ப் பதிகத்தானும் அறியப்படுகின்றன. இவ் வேந்தர் பெருமானை திருத்தொண்டர் புராணத்திற் கூறப்பட்ட சிவனடியார்களில் ஒருவராகிய கோச் செங்கட் சோழர் என்பர். திருவானைக்காவில் திருவெண்ணாவற்கீழ் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்ட சிலந்தி கோச்செங்கட் சோழராகப் பிறந்த வர

லாற்றினைப் பெரியபுராணம் இனிது விளக்குகின்றது. திருநெறித்தமிழ் வேதமாகிய தேவாரம் முதலியவற்றிலும் இவ்வுண்மை விதந் தோதப்படுகின்றது. இவ்வரசர் பெருந்தகை சிவனார் மேவுந் திருக்கோயில்கள் பற்பல சமைத்த பரிசும் திருமுறைகளிற் பேசப்படுகின்றது. திருமங்கை யாழ்வாரும் 'இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற் கெழின்மாட மெழுபது செய் துலக மாண்ட-திருக்குலத்து வளச்சோழன்' என்று இதனைப் பாராட்டுவாராயினர். இவ்வாற்றால் இம்மன்னரது பெருமை அளப்பரிய தொன்றாதல் காண்க.

இனி, இந்நூலாசிரியர் பொய்கை யென்னும் நாட்டிற் பிறந்தமையால் இப்பெய ரெய்தினரென ஒரு சாராரும், பொய்கை யென்னும் ஊரிற் பிறந்தமையாலெனப் பிறிதொரு சாராரும் கூறுப. இவ்வாசிரியர் 'கானலந்தொண்டி அஃதெம்மூர்' என்று புறத்திலே கூறியிருப்பதனால் மேல்கடற் கரையிலுள்ள தொண்டி நகரம் இவரது பிறப்பிடம் என்று உணரலாகும். அன்றித் தம்பாற் பேரன்புடையனான சேரமானது பதியாதல் குறித்து அங்ஙனம் கூறினாரென்னினும் அமையும்.

களவழி நாற்பது என்னும் இந்நூல் செங்கட் சோழரது போர்க்கள வென்றியைத் தனித்தெடுத்துக் கூறுதற் கெழுந்தது. 'கூதிர் வேனில்' என்னும் புறத்திணையியற் சூத்திரத்து 'ஏரோர் களவழி யன்றிக் களவழித்-தேரோர் தோற்றிய வென்றியும்'

என்பதனுல் களவழி இருவகைப்படும் என்க. இவற்றுள் முன்னது, உழுதொழிலாளர் விளையுட்காலத்துக் களத்தின்கட் செய்யுஞ் செய்கை; என்றது, நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து அதரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலிகொடுத்துப் பின்னர்ப் பரிசிலர் முகந்து கொள்ள வரிசையின் அளிப்பது. பின்னது, அரசர் போர்க்களத்துச் செய்யுஞ் செய்கை; என்றது, நாற்படையுங் கொன்று களத்திற் குவித்து எருதுகளிருக வாண்மடலோச்சி அதரிதிரித்து......அட்ட கூழ்ப்பலியைப் பலிகொடுத்து எஞ்சிநின்ற யானை குதிரைகளையும், ஆண்டுப்பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்து கொள்ளக் கொடுத்தல். களவழி-களத்தினிடம்; களத்திடத்து நிகழ்ச்சியைப் பாடும் செய்யுளைக் களவழி யென்றது ஆகுபெயர். பிற்கூறிய களவழிச் செய்யுளைப் புலவர் தேரேறிவந்து பாடுவரென்ப. இவ்வாற்ருல் இதன் இலக்கணம் ஓர்ந்து கொள்க.

இந்நூலின் கண்ணே யானைப்போர் மிகுத்துக் கூறப்படுகின்றது. திருகார்த்திகைத் திருவிழா குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலானது சொற்செறிவும், பொருட் பொலிவும் வாய்ந்த பாக்களாலாயது. பழைய உரையாசிரியர்களால் தொல்காப்பியவுரை முதலியவற்றில் மேற்கோளாக எடுத்துக்காட்டப் பெற்ற பெருமையினையுடையது. இதிலுள்ள ஒவ்வொரு வெண்பாவிலும் பொருட் கேற்ற பெற்றி இவ்

வாசிரியர் அமைத்திருக்கும் உவமைகள் கற்போர்க்குக் கழிபேரின்பம் விளைப்பன.

இந்நூற்குப் பழையவுரை யொன்றுண்டு. அது செய்யுட் பொருளைப் பொழிப்பாக வெடுத்துரைப்பது; விசேடக்குறிப்பு யாதும் கொண்டிராதது. மற்று இதற்குச் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்களால் பதப்பொருளும், இலக்கணக் குறிப்புக்களுமாக எழுதப் பெற்ற உரையொன்றுண்டு. அதிலுள்ள இலக்கணக் குறிப்புக்கள் பெரும்பாலும் இக்காலத்துக்கு வேண்டப் பெறுதனவாயும், வழுவுள்ளனவாயும் தோற்றின; பதப்பொருளும் பலவிடத்துத் தவறுனபாடத்தின் மேலெழுந்தும், மூலத்தொடு மாறுபட்டும் வழுவியிருந்தமை புலனுயிற்று. இவ் வேறுக்களாற்றுன் நல்லிசைப் புலவர் செய்யுட்கு உரைகாணுந்திறன் ஒரு சிறிதும் வாய்க்கப்பெறுதயானும் இதற்கோர் உரையெழுதுமாறு நேர்ந்தது. என் சிற்றறிவிற் கெட்டியவாறு பழைய பொழிப்புரையை முற்றிலும் தழுவிப் பதப் பொருள் கூறியும், இன்றியமையாத மேற்கோள்களும், இலக்கணங்களும் காட்டியும் இவ்வுரையினை வகுத்தமைக்கலானேன். பல சுவடிகள் பார்த்துப் பாடவேற்றுமையுங் காட்டப் பெற்றுளது.

நம் தாய் மொழியாய அமிழ்தினு மினிய தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி அரிய தொண்டுகள் பல ஆற்றிவரும் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்

தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் விருப்பமும், தூண்டுதலுமே என்னைக்கொண்டு இதனை இங்ஙனம் செய்வித்தன. இதிற் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருளுமாறு அறிஞர்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

ந. மு. வேங்கடசாமி.

திருச்சிற்றம்பலம்

பொய்கையார்

இயற்றிய

களவழி நாற்பது

க. நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்-தாண்மாய்ந்து
*முன்பக லெல்லாங் குழம்பாகிப் †பின்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து.

(பதவுரை) புனல்நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், தப்பியார் - பிழைசெய்தவரை, அட்ட-கொன்ற, களத்து-போர்க்களத்தில், நாள்ஞாயிறு - ஞாயிறுதோன்றிய காலைப்பொழுதில், உற்ற - வந்தடைந்த, செருவிற்கு - போரில், வீழ்ந்தவர்-பட்டவருடைய, வாள்மாய்-வாளழுந்து தலா லொழுகும், குருதி - உதிரத்தை, களிறு உழக்க-யானைகள் கலக்க, தாள் - (அவற்றின்) காலாலே, மாய்ந்து - சுருங்கி, முன்பகல் எல்லாம் - முற்பகற்பொழுதெல்லாம், குழம்புஆகி-சேருகி, பின்பகல் - பிற்பகற்பொழுதில், துப்பு துகளில்-பவளத் துகள்போல, கெழூஉம் - (விசும்பெங்கும்) பரந்து செறியாநிற்கும் எ-று.

---

*முற்பகல் என்றும் பாடம். †பிற்பகல் என்றும் பாடம்

நாள் என்பது பகலின் முற்கூறாகிய காலைப்பொழுதைக் குறிக்கும். இதனை, நாணிழல், நாளங்காடி என்பவற்றால் அறிக. குருதிமாய்ந்து குழம்பாகிக் கெழூஉம் என முடிக்க. செருவிற்கு - வேற்றுமை மயக்கம். வாண்மாய்-மறைதல் என்னும் பொருட்டாய மாய்தல் என்பதன் முதனிலை அழுந்தும் என்னும் பொருளில் வந்தது. கெழூஉம்-செய்யுளிசை கெட்டவழி வந்த அளபெடை. தப்பியார்-வினையாலணையும் பெயர்; தப்பு-பகுதி, இன் 'இடைநிலை ஈறு கெட்டது. (க)

உ. ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாட
னார்த்தம ரட்ட களத்து.'

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், ஆர்த்து - குணலையிட்டு, அமர் - போரில், அட்ட-கொன்ற, களத்து-போர்க்களத்தில், ஞாட்பின்உள் - படையின்கண், எஞ்சிய - ஒழிந்த, ஞாலஞ்சேர் - நிலத்திற்சேர்ந்த, யானைகீழ் - யானைகளின்கீழ் (கிடந்த), போர்ப்புஇல் - மேற்போர்வையில்லாத, இடி-இடிபோன் றொலிக்கும், முரசின் ஊடுபோம்-முரசத்தினூடு செல்லும், ஒள் குருதி-ஒள்ளிய உதிரம், கார்பெயல் பெய்தபின்-கார்காலத்து மழை பெய்தபின்பு, செங்குளம்-செங்குளத்தினது, கோடுகீழ்-கரையின்கீழுள்ள, நீர் தூம்பு-மதகுகள், நீர் உமிழ்வ - நீருமிழ்தலை, போன்ற-ஒத்தன எ-று.

செங்குளம்-செம்மண்ணாற் சிவந்த நீரையுடைய குளம். பொருளின்கண் உள்ள குருதி யென்னும் பெயருக்கேற்ப

உவமைக்கண் உமிழ்தலையுடைய நீர் என மாற்றுக. கார்-பருவத்திற்கு இருமடியாகுபெயர். போன்ற - போல் என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த வினைமுற்று. (௨)

௩. ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வா
ரிழுக்குங் களிற்றுக் கோ *டூன்றி யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து.

(பதவுரை) மழைக்குரல் - மேகத்தின் முழக்கம் போலும் முழக்கத்தையுடைய, மாமுரசின் - பெரிய முரசினையுடைய, மல்குநீர்நாடன் - நிறைந்த நீரினையுடைய நாட்டினையுடையனாகிய செங்கட்சோழன், பிழைத்தாரை - தப்பினவரை, அட்ட - கொன்ற, களத்து - போர்க்களத்தில், ஒழுக்கும் குருதி-புக்காரை ஒழுகச்செய்யுங் குருதியை, உழக்கி-கலக்கி, தளர்வார்- (அதனைக் கடக்கலாற்றாது) தளர்ச்சி யுறுவார், இழுக்கும்-மறிந்துகிடக்கின்ற, களிற்றுக்கோடு-யானையின் கொம்புகளை, ஊன்றி எழுவர்-ஊன்றுகோலாகக் கொண்டு எழா நிற்பர் எ-று.

ஒழுக்கும்-ஒழுகும் என்பதன் பிறவினை; ஒழுகல்-கால் தளர்ந்து செல்லுதல்; இதனை, 'பாங்குன்றினிற் பாய்புனல் யாமொழுக' என்னும் கோவையாரால் உணர்க. இழுக்குதல் - தவறுதல்; ஆவது வெட்டுண்டு கிடத்தல். முரசினையுடைய நாடன் என்றும், தளர்வார் ஊன்றி யெழுவர் என்றுங் கூட்டுக. (௩)

---

* எழூஉம் என்றும் பாடம்.

௪. உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை - யிருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து.

(பதவுரை) செங்கண்மால் - செங்கட்சோழன், புல்லாரை - பகைவரை, அட்டகளத்து - கொன்றபோர்க்களத்தில், உருவக்கடுந்தேர்-அஞ்சத்தக்க கடியதேரை, முருக்கி- சிதைத்து, அ தேர் பரிதி - அந்தத் தேரினுருளினை, சுமந்து எழுந்த யானை - சுமந்தெழுந்த யானைகள், இருவிசும்பு இல்- பெரிய வானத்தில், செல்சுடர் - செல்லுகின்ற ஞாயிறு, சேர்ந்த மலைபோன்ற-அடைந்த மலையை யொத்தன எ-று.

உரு என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது. இஃது அச்சம் என்னும் பொருட்டாதலை 'உருவுட்காகும்' என்பதனால் அறிக. மற்று - அசைநிலை. பரிதி - இது பருதியெனவும் வழங்கும். பருதி-வட்டம்; தேருருளை வட்டமுடைமையின் பருதி யெனப்பட்டது; 'சுரம் பலகடவும் சுரைவாய்ப்பருதி' என்னும் பதிற்றுப்பத்தும், அதன் உரையும் நோக்குக. சுடர் - ஆகுபெயர். போன்ற - அன்பெறாத அகரவீற்றுப் பலவறிசொல். திருமாலின் வழியில் வந்தமையால் சோழனுக்கு 'மால்' என்பது ஒரு பெயர்; பெருநர்பாணாற்றில் 'முந்நீர்வண்ணன் புறங்கடை' என வருவது காண்க. (௪)

௫. தெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாங்
குருதி படிந்துண்ட காக - முருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா
றப்பியா ரட்ட களத்து.

(பதவுரை) செங்கண்மால் - செங்கட்சோழன், தப்பியார் - பிழைத்தாரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், தெரிகணை - ஆராய்ந்த அம்புகளாலும், எஃகம் - வேல்களாலும், திறந்த - திறக்கப்பட்ட, எல்லாவாய் (உம்)- எல்லாப் புண்களின் வாய்களினின்றும், குருதிபடிந்து- (ஒழுகும்) உதிரத்திற் படிந்து, உண்ட காகம் - (அவ்வுதிரத்தை) உண்ட காகங்கள், உரு இழந்து- (தம்முடைய) நிறத்தையிழந்து, குக்கில் புறத்த - செம்போத்தின் புறத்தையுடையவாகி, சிரல்வாய-சிச்சிலிக் குருவிபோன்ற வாயையுடையவாயின எ-று.

வாயெல்லாம் என்பதனை எல்லாவாயும் என மாற்றுக. உண்ட என்பது பொதுவினையாதலை 'உண்ணு நீரூட்டிவா' என்னும் குறிஞ்சிக்கலி யானும் அறிக. குக்கில்-செம்போத்தாதலை 'குக்கில் செம்போத்துச் சகோரமு மதற்கே' என்னும் பிங்கலந்தையான் அறிக. சிரல்-சிச்சிலி, மீன்கொத்துக்குருவி; 'புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்' என்பது சிறுபாண். (ரு)

௬. நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த-விடித்துரறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் *தூறெறிந் தற்றே யருமணிப்
பூணேந் தெழின்மார் பியறிண்டேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து.

(பதவுரை) அருமணி - (பெறுதற்கு) அரிய மணிகள் (அழுத்திய), பூண் ஏந்து - அணிகலத்தையேந்திய, எழில்- எழுச்சியையுடைய, மார்பு - மார்பையும், இயல் - நடத்

* தூவெறிந்து என்றும் பாடம்.

தலையுடைய, திண் தேர் - வலிய தேரையுமுடைய, செம்பியன் - செங்கட்சோழன், தெவ்வேந்தரை - பகையரசரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், நால் நால் திசையும்-பலதிசைகளிலும், பிணம் பிறங்க-பிணங்கள்மிக, யானை அடுக்குபு - யானைக ளடுக்கப்பட்டு, ஏற்றிக்கிடந்த - உயர்ந்து கிடந்தன, இடித்து உரறி-இடித்துமுழங்கி, அம்கண்-அழகிய இடத்தையுடைய, விசும்பின் - வானத்தினின்று, உரும் எறிந்து - இடிவீழ்ந்து, எங்கும் - எவ்விடத்துமுள்ள, பெருமலை - பெரியமலைகளை, தூறு - தொடக்கு (அற), எறிந்தால் அற்று-எறிந்தாற்போலும் எ-று.

நாலுல்-பன்மை குறித்தது; எட்டு எனினும் அமையும். அடுக்குபு வேற்றி-உயிர்வர உகரம் கெடாது நின்றது; 'அடித் தடித்து வக்காரம்' என்புழிப்போல. இயல்திண்டேர் என் புழி இயல் இப் பொருட்டாதலை 'இயறேர்க்குட்டுவன்' என் னும் சீறுபாண் உரையா லறிக. (௬)

எ. அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
யிங்கு லிகக்குன்றே போற்றோன் றுஞ்-செங்கண்
வரிவரால் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து.

(பதவுரை) செம்கண் - சிவந்தகண்களையும், வரி - வரிகளையுமுடைய, வரால்மீன் பிறழும்-வரால்மீன்கள் பிறழாநிற்கும், காவிரிநாடன் - காவிரிநாட்டையுடைய செங்கட் சோழன், பொருநரை - (தன்னோடு) போர்செய்வாரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், அஞ்சனம்குன்று-நீலமலையை, எய்க்கும்-ஒத்துத்தோன்றும், யானை-யானைகள், அமர்உழக்கி-போரின்கட் கலக்கி, இங்குலிகம் குன்றுபோல்-

சாதிலிங்க மலையைப்போல, தோன்றும் - சிவந்து தோன்றா நிற்கும் எ-று.

ஏய்க்கும்-உவமச்சொல். மீன் - இத் தமிழ்ச் சொல்லை வடநூலார் மீனம் எனத் திரித்து வழங்குவர். (எ)

அ. யானைமேல் யானை நெரிதர வாஅது
கண்ணேர் கடுங்கணை *மெய்ம்மாய்ப்ப-வெவ்வாயு
மெண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே
பண்ணா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாட
னண்ணாரை யட்ட களத்து.

(பதவுரை) பண்ஆர் - ஒப்பனையமைந்த, இடிமுரசு இன்- இடிக்கு முரசினையுடைய, பாய்புனல் - பாய்ந்துசெல்லும் நீரினையுடைய, நீர்நாடன் - காவிரிநாட்டை யுடையோன், நண்ணாரை-பகைவரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், யானைமேல் யானை நெரிதர-யானைகள் மேல் யானைகள் சாய, ஆஅது-நீங்காமல், கண்நேர் - (மகளிரின்) கண்களை யொக்கும், கடுங்கணை-கடிய அம்புகள், எ வாய் உம்- எவ்விடத்தும் (பாய்ந்து), மெய்மாய்ப்ப - (அவற்றின்) உடலைமறைத்தலால் (அவை), எண் அரு - அளவில்லாத, குன்றில்-மலைகளில், குரீஇ இனம்-குருவியின் கூட்டங்கள் மொய்த்திருப்பவற்றை, போன்ற - ஒத்தன எ-று.

மாய்ப்ப-மறைக்க; இஃது இப்பொருட்டாதலை 'களிறு மாய்க்குங் கதிர்க்கழனி' என்னும் மதுரைக் காஞ்சியடி உரையா னறிக. குரீஇ - இயற்கை யளபெடை. முரசினை யொர்க்கும் பாய்புனல் என உவமையாக்கலும் ஒன்று. (அ)

* மெய்ம்மறைப்ப என்றும் பாடம்.

௯. மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலார்சோ டற்ற கழற்கா *லிருங்கட
லூணில் சுறபிறழ்வ போன்ற புனனாட
னேராரை யட்ட களத்து.

(பதவுரை) புனல்நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட்சோழன், நேராரை - பகைவரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், மேலோரை-(குதிரை முதலாயினவற்றின்) மேலிருந்தவரை, கீழோர்-கீழ்நின்ற காலாட்கள், குறுகி-சென்றுசார்ந்து, குறைத்திட்ட - துணித்த, கால் ஆர் சோடு-காற்கிட்ட அரணத்தோடு, அற்ற - அறுபட்ட, கழல்கால்-வீரக்கழ லணிந்த கால்கள், இருங்கடல் - பெரிய கடலுள், ஊண்இல் - இரையில்லாத, சுறபிறழ்வ போன்ற-சுறாமீன்கள் பிறழ்வனவற்றை யொத்தன எ-று.

சோடு - சுவடு என்பதன் மரூஉ; அரணம் என்பது பொருள். அரணம் - செருப்பு. சுற-இது 'குறியதனிறுதிச் சினைகெட' என்னுஞ் சூத்திரத்து இலேசானே ஆகாரங் குறுகி உகரம் பெறாது நின்றது. நீலச்சுறா என்னும் பாடத்திற்குக் கரிய சுறாமீன்கள் என்று பொருள் கொள்க. (௯)

௰. பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாந்-தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

(பதவுரை) புனல்நாடன் - நீர் நாட்டையுடைய செங்கட்சோழன், தெவ்வரை - பகைவரை, அட்டகளத்து -

---

* இருங்கடலுணீலச்சுறாப்பிறழ்வ என்றும் பாடம்.

கொன்ற போர்க்களத்தில், பல்கணை-பலஅம்புகளும், எ வாய் உம்-எவ்வுறுப்பிலும், பாய்தல்இன்-பாய்தலால், செல்கலாது-செல்லமாட்டாது, ஒல்கி - தளர்ந்து, உயங்கும் - வருந்தும், களிறுஎல்லாம் - யானைகளெல்லாம், தொல் சிறப்பு இன்-தொன்றுதொட்டு வருஞ் சிறப்பினையுடைய, செவ்வல்குன்றம்போல் - தாதுமலை போல, தோன்றும் - தோன்றா நிற்கும் எ-று.

செல்கலாது - வினையெச்சம்; குவ்வும் அல்லும் சாரியைகள். செவ்வல் - பண்புப்பெயர். அம்-சாரியை. தாதுமலை-சிந்தூரமலை. 'இங்குலிகக்குன்றே போற்றோன்றும்' என முன் வந்தமையும் காண்க. (௰)

கக. கழுமிய ஞாட்பி னுண் *மைந்திகந்தா ரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித்-தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.

(பதவுரை) அதிரா போர் - கலங்குதலில்லாத போரை யுடைய, செங்கண்மால் - செங்கட்சோழன், அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், கழுமிய - நெருங்கிய, ஞாட்பின் உள்-போரில், மைந்து இகந்தார்-வலியிழந்தவர்கள், இட்ட-போகவிட்ட, ஒழிமுரசம் - ஒழிந்தமுரசம், ஒள் குருதி - ஒள்ளிய வுதிரத்தில், ஆடி - படிந்து, தொழில் மடிந்து - (தம்) தொழிலைத் தவிர்ந்து, கண்காணா - (படைகளா லூறுபட்டு) கட்புலனிழந்த, யானை உதைப்ப - யானைகளுதைத்தலால், மங்குல் மழையின் - மேகம்போல, இழும் என அதிரும் - இழுமென முழங்கா நிற்கும் எ-று.

*மைந்திழந்தாரிட்ட என்றும் பாடம்.

முரசம் ஆடிமடிந்து முழங்கும்என வினைமுடிவு செய்க. மங்குல் மழை - 'ஒருபொரு ளிருசொற்பிரிவில வரையார்' என்பதனுல் ஒருபொருண்மேல் வந்தன. அதிரா-கலங்காத, நடுங்காத; 'அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்' என்பது காண்க. (கக)

கஉ. ஓவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றவே
காவிரி நாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.

(பதவுரை) காவிரி நாடன் - காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன், கடாய் - படையைச் செலுத்தி, கடிது ஆக - விரைந்து, கூடாரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், ஓவா-இடைவிடாமல், கணைபாய- அம்புகள் தைக்க, எழில்வேழம் - எழுச்சியையுடைய யானைகள், ஒல்கி-தளர்ந்து, தீவாய்-தீயின் நிறம்பொருந்திய, குருதி இழிதலால்-உதிரத்தை யொழுக்குதலால், செம்தலை-சிவந்த இடத்தையுடைய, பூவல் குன்றம்-செம்மண் மலைகள், புயற்கு ஏற்ற போன்ற - மழைக்கு எதிர்ந்தன ஒத்தன எ-று.

செம்மண்மலையிற் பெய்த மழை செந்நீரா யொழுகுமாதலின் உடல்முழுதும் குருதியை யொழுகவிடும் யானைகள் அம்மலைகளை யொக்கும் என்றார். தீவாய் என்பதனைக் கணையோடு இயைப்பினும் அமையும். இழிதல் பிறவினையாயிற்று. பூவல் - செம்மண்; "பூவலூட்டிய புனைமாண்பந்தர்க் - காவற் சிற்றிற் கடிமனைப்படுத்து" எனச் சிலப்பதிகாரத்து வருவது காண்க. அம்-சாரியை. (கஉ)

கங. நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர்
வரைபுரை யானைக்கை நூற-வரைமே
லுருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து.

(பதவுரை) செருமொய்ம்புஇன்-போர்வலியையுடைய, சேய் - செங்கட்சோழன், பொருது அட்ட - போர்செய்து கொன்ற, களத்து - போர்க்களத்தில், நிரை கதிர்-நிரைத்த வொளியினையுடைய, நீள் எஃகம் - நீண்ட வாளை, நீட்டி-பின்னேவாங்கி, வயவர் - வீரர்கள், வரைபுரை - மலையையொத்த, யானை கை-யானைகளின்கைகளை, நூற - துணிக்க, வரைமேல்-மலையின்மேல்,: உரும் எறி - இடிவிழுந்த, பாம்பு இன் - பாம்பைப்போல, புரளும் - புரளாநிற்கும் எ-று.

பாம்பு உருமெறியப்பட்டு மலைமேனின்றும் விழுந்து புரளுமாறுபோலக் கையும் வாளெறியப்பட்டு யானையினின்றும் விழுந்து புரளாநிற்கும் என்க. எஃகம் வாளினையும், நீட்டல் பின்வாங்கலையுங் குறித்து நின்றன. எறி-என்னும் பெயரெச்ச முதனிலை பாம்பென்னும் செயப்படுபொருட் பெயர் கொண்டது. (கங)

கச. கவளங்கொள் யானையின் *கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற்-†றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், கொங்கரை-கொங்குநாட்டவரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், கவளம் கொள் - கவளத்தைக் கொள்ளும், யானை கை - யானைகள் (தம்) துதிக்கைகள், துணிக்கப்பட்டு - துண்டு படுத்தப்பட்டு, பவளம் சொரி

* கைகடுணிக்க என்றும், †திகழொளிய என்றும் பாடம்

தரு - பவளத்தைச் சொரியாநின்ற, பைபோல் - பையைப் போல, திவள்ஒளிய-விளங்கும் ஒளியையுடைய, ஒள்-ஒள்ளிய, செம்குருதி - சிவந்த வுதிரத்தை, உமிழும் - உமிழாநிற்கும் எ-று.

கவளம்-யானையுணவு ; 'கல்லாவிளைஞர் கவளங்கைப்ப' 'வாங்குங்கவளத்து' என்பன காண்க. இன்-சாரியை. (கச)

கரு. கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்-தச்சன்
வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து.

(பதவுரை) சினம்-கோபத்தையுடைய, செங்கண்மால் - செங்கட்சோழன், பொருத களத்து-போர்செய்த களத்தில், எ வாய் உம் - எவ்விடத்தும், குடை முருக்கி - குடைகளை யழித்து, கொல் யானை - கொல்லும் யானைகள், பாய - பாய்தலால், புக்க வாய்எல்லாம்-அவ் யானைகள் புகுந்த இடமெல்லாம், பிணம் பிறங்க - பிணங்கள் விளங்க, தச்சன் - தச்சனால், வினைபடு - வினைசெய்யப்படும், பள்ளியில்- இடங்கள்போல, தோன்றும்-தோன்றா நிற்கும் எ-று.

பள்ளி - இடமென்னும் பொருட்டாதலைத் தொல்காப்பியத்தே 'சொல்லிய பள்ளி' என வருதலா னறிக. தச்சன்-மரவினைஞன்; 'மரங்கொல்தச்சர்', 'தச்சச்சிறார்' என்பன காண்க. (கரு)

கசு. பருமம் வினமாக் கடவித் தெரிமறவ
ரூக்கி யெடுத்த வரவத்தி னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், வேந்தரை - பகை மன்னரை, அட்டகளத்து- கொன்ற போர்க்களத்தில், பருமம் - கல்லணையையுடைய, இனம் மா - திரண்ட குதிரைகள், தெரி மறவர் - விளங்கிய வீரத்தினையுடையரால், கடவி - நடத்தப்பட்டு, ஊக்கி - மன வெழுச்சி மிக்கு, எடுத்த - எழுப்பப்பட்ட, அரவத்தின் ஆர்ப்பு - மிக்க ஆரவாரத்தை, அஞ்சா - அஞ்சாத, குஞ்சரம்- யானைகளின், கும்பத்து - மத்தகத்தில், பாய்வன - பாய்கின்றவை, குன்று - மலையின்கண், இவரும்-பாய்கின்ற, இரு - பெரிய, வேங்கை புலி - வேங்கையாகிய புலியை, போன்ற- ஒத்தன எ - று.

பருமம், பண், கல்லணை என்பன ஒரு பொருட் சொற்கள். கடவி -செயப்பாட்டு வினையெச்சம். மறவர் கடவி என மாற்றுக. கடவப்பட்டு ஊக்கிப் பாய்வன என்க; யானைக்கு அடையாக்கி அஞ்சா என்பதனோடு முடிப்பினும் அமையும். (கரு)

கஎ. ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்
தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி [னவே
கார்த்திகைச்சாற்றிற் கழி*விளக்கைப் போன்ற
போர்க்கொடித் தானைப் பொருபுன னீர்நாட
ணார்த்தம ரட்ட களத்து.

(பதவுரை) போர்-போர்க்குரிய, கொடி-கொடியினை யுடைய, தானை-படையினை உடையனும், பொரு-மோதுகின்ற, புனல் - நீரினையுடைய, நீர்நாடன் - காவிரி நாட்டை யுடைய செங்கட்சோழன், ஆர்த்து - ஆரவாரித்து, அமர் -

* விளக்குப்போன்றனவே என்றும் பாடம்.

போரில், அட்ட-(பகைவரைக்) கொன்ற, களத்து-களத்தில், ஆர்ப்பு எழுந்த-ஆரவாரமிகுந்த, ஞாட்பின் உள்-போரின்கண், ஆள்ஆள் - ஆளும் ஆளும், எதிர்த்து ஓடி - எதிர்சென்றோடி, தாக்கி-பொருது, எறிதர-(படைகளை) வீசுதலால், வீழ்தரும்-சொரியாநின்ற, ஒள் குருதி - ஒள்ளிய வுதிரம், கார்த்திகை சாறுஇல் - கார்த்திகை விழாவில், கழி விளக்கை-மிக்கவிளக்கினை, போன்றன - ஒத்தன எ - று.

சாறு - விழா; இதனைச் 'சாறுதலைக்கொண்டென' என்னும் புறப்பாட்டானும், 'சாறயர்களத்து ' என்னும் முருகாற்றுப்படையானும் அறிக. கார்த்திகை நாளில் நிரை நிரையாக விளக்கிட்டு விழாக்கொண்டாடும் வழக்கம் மிக்கிருந்தது. இதனை 'குறுமுயன்மறுநிறங்கிளர மதிநிறைந், தறுமீன்சேருமகலிருணடுநாண், மறுகுவிளக் குறுத்துமாலைதூக்கிப், பழவிறன் மூதூர்ப்பலருடன்றுவன்றிய, விழவுடனயர வருகதிலம்ம' என்னும் அகப்பாட்டானறிக. 'துளக்கில் கபாலீச்சரத்தான் றொல்கார்த்திகைநாள் ....விளக்கீடு காணாதேபோதியோ பூம்பாவாய்' என்பது திருநெறித்தமிழ்மறை. கார்த்திகைக்கு மலையில் விளக்கிடுவது 'குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன' என்று சிந்தாமணியிற் கூறப்பெற்றுளது. (கஎ)

கஅ. நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்கும்-தெளிந்து
*தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சே
யுடற்றியா ரட்ட களத்து.

(பதவுரை) தெளிந்து - விளங்கி, தடறு - உறையினது, இடம்கொள் - இடத்தினைக்கொண்ட, வாள் - வாளையும்,

* தடற்றிலங்கொள்வாள் என்றும் பாடம்.

தளை அவிழும் - கட்டவிழ்ந்த, தார் - மாலையையுமுடைய, சேய் - செங்கட் சோழன், உடற்றியார் - சினமூட்டியபகைவரை, அட்ட - கொன்ற, களத்து - போர்க்களத்தில், நளிந்த- நீர்செறிந்த, கடல்உள் - கடலில், திமில் - தோணியையும், திரை - அலையையும், போல் - போல, எங்கும் - எவ்விடத்தும், விளிந்தார் - பட்டாருடைய, பிணம் - பிணக்குப்பையை, குருதி ஈர்க்கும் - உதிரவெள்ளம் இழுநிற்கும் எ-று.

'தடற்றிலங்கொள்வாள்' என்னும் பாடத்திற்கு உறையில் விளங்குகின்ற ஒள்ளியவாள் என்று பொருளுரைக்க. நளிந்த-நளியென்னும் உரிச்சொல்லடியாக வந்த பெயரெச்சம்; நீர்மிக்க எனினுமாம்; நளியென்பது பெருமையும், செறிவுமாதல் தொல்காப்பியத்தா னறிக. (கஅ)

கக. இடைமருப்பின் விட்டெறிந்த *வெஃகங்கான் மூழ்கிக்
கடைமணி காண்வரத் †தோற்றி-நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து.

(பதவுரை) நீர்நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட் சோழன், அமர்புக்கு - போரிற்புகுந்து, அட்டகளத்து-(பகைவரைக்) - கொன்ற போர்க்களத்தில், மருப்பின் இடை - (யானைகளின்) கொம்பினடுவே, விட்டெறிந்த எஃகம் - விட்டெறிந்தவேல், கால்மூழ்கி - காம்புகுளித்தலால், கடைமணி-(அவ்வேலின்) கடைமணி, காண்வர - விளங்க, களிறு எல்லாம் - யானைகளெல்லாம், தோற்றி - தோன்றி, நடைமெலிந்து - நடைதளர்ந்து, மு கோட்டபோன்ற - மூன்று கொம்புகளையுடைய யானைகளை யொத்தன எ - று.

---

* எஃகங்காழ் என்றும் பாடம். †தோன்றி என்றும் பாடம்.

காழ் என்பதே சிறந்த பாடம். காழ் - காம்பு. மூழ்க லான் என்பது மூழ்கியெனத் திரிந்து நின்றது. மூக் கோட்ட - இது குறிப்பு வினைப்பெயர். (கக)

உ0. இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் *தோற்ற—மதிர்விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
னேரா ரை யட்ட களத்து.

(பதவுரை) புனல்நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட் சோழன், நேரா ரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், எருவை-கழுகுகள், இருசிறகர் - இரண்டு சிறகின் கண்ணுமுள்ள, ஈர்க்கு பரப்பி-ஈர்க்குகளைப் பரப்பி, குருதி-உதிரத்தோடு, பிணம் கவரும்-பிணங்களைக் கொள்ளை கொள்ளும், தோற்றம் - காட்சி, அதிர்வு இலா - கலக்கமில் லாத, சீர் - ஓசையையுடைய, முழா-முழவினை, பண் அமைப் பான் - பண்ணமைப்பவனை, போன்ற - ஒத்தன எ-று.

சிறகர் - ஈற்றுப்போலி. (உ0)

உக. இணைவேல் லெழின்மருமத் திங்கப்புன் கூர்ந்து
கணையலைக் கொக்கிய யானை-துணையிலவாய்த்
†தொல்வலி யாற்றித் துளங்கினவாய் மெல்ல
நிலங்கால் கவரு மலைபோன்ற செங்கட்
சினமால் பொருத களத்து.

* தோற்றந்திரலிலா என்றும் பாடம்.

† தொல்வலியிற்றீர என்பதுவே சிறந்த பாடம்.

(பதவுரை) சினம்-கோபத்தையுடைய, செங்கண்மால்-செங்கட் சோழன், பொருத களத்து - போர்செய்த களத்தில், இணைவேல் - இணைத்த வேல்கள், எழில் மருமத்து - அழகிய மார்பில், இங்க - அழுந்துதலால், புண் கூர்ந்து - புண் மிகுந்து, கணை அலைக்கு-அம்பின் அலைப்புக்களால், ஒல்கிய யானை - தளர்ந்த யானைகள், துணை இலவாய்-(தம்மேற்கொண்ட) துணைவரை யிலவாய், தொல் வலி - பண்டை வலியினின்று, ஆற்றி - நீங்கி, துளங்கின ஆய் - நடுங்கி, மெல்ல - மெல்ல, நிலம் - நிலத்தை, கால் கவரும் - காலாலே யகப்படுக்கும், மலைபோன்ற - மலையை யொத்தன எ - று.

இங்கல் - அழுந்தல். அலை-முதனிலைத் தொழிற் பெயர். அலைக்கு - வேற்றுமை மயக்கம். (உக)

உஉ. இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுத
லாடியல் யானைத் தடக்கை யொளிறுவா
ளோடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

(பதவுரை) பாடு ஆர்-ஒலிநிறைந்த,இடி-இடிபோன்ற, முரசின்-முரசினையுடைய, பாய்புனல்-பாய்ந்து செல்லும் நீரினையுடைய, நீர்நாடன்-காவிரிநாட்டையுடையவனாகிய செங்கட் சோழன், கூடாரை - பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், ஒளிறு வாள்-விளங்கும் வாளை யேந்திய, ஓடா மறவர் - புறங்கொடாத வீரர்கள், வரிநுதல் - வரி பொருந்திய நெற்றியையுடைய, ஆடு இயல் - வெற்றிசேர்ந்த, யானை தடகை-யானையின் நீண்ட கைகளை, துணிப்ப-துண்டு

படுத்த, துணிந்தவை-துண்டிக்கப்பட்ட அவைகள், இருநிலம் சேர்ந்த - பெரிய நிலத்தில் விழுந்து கிடக்கும், குடைகீழ் - குடைகளின் அருகே (கிடப்பன), கோடுகொள் - கலை நிறைந்த, ஒள்மதியை - ஒள்ளியசந்திரனை, நக்கும் பாம்பு - தீண்டுகின்ற பாம்பினை, ஒக்கும் - ஒத்திருக்கும் எ-று.

குடைக்கீழ்க் கிடப்பன என ஒருசொல்வருவிக்க. ஆடு-வென்றி; அசைதலும் ஆம். கோடு-பக்கம்; ஈண்டுக் கலையை உணர்த்திற்று. 'கோடுதிரள்கொண்மூ' என்பது காண்க. நீர்நாடு-பெயர்; நீர் - ஆகுபெயரும் ஆம். (உஉ)

உங. எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்தகளிற் றுடம்பு
செக்கர்கொள் வானிற் கருங்கொண்மூப் போன்றவே
கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து.

(பதவுரை) கொற்றம்-வெற்றியையுடைய, வேல்-வேலையேந்திய, தானை - சேனையையும், கொடி திண்தேர் - கொடிகட்டிய வலிய தேரையு முடைய, செம்பியன்-செங்கட் சோழன், செற்றாரை-பகைவரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், வயவர் எற்றி எறிய-வீரர்கள் (படைக்கலங்களை) எடுத்து எறிய, நுதல் பிளந்து - நெற்றிபிளத்தலால், நெய்த்தோர் புனல்உள்-உதிரநீருள், நிவந்த - மூழ்கியெழுந்த, களிறு உடம்பு - யானைகளின் உடம்புகள், செக்கர் கொள் வான் இல்-செக்கர்வானத்தில், கருகொண்மூ - கரியமேகத்தை, போன்ற-ஒத்தன எ-று.

பிளத்தலால் என்பது பிளந்தெனத் திரிந்து நின்றது. நெய்த்தோர் - குருதி. செக்கர்-செந்நிறம். (உங)

உச. திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை - நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரி நீர்நாட
னண்ணாரை யட்ட களத்து.

(பதவுரை) கண் ஆர் - கண்ணுக்குநிறைந்த (காட்சியை யுடைய), கமழ் தெரியல்-மணக்கின்ற மாலையை (அணிந்த), காவிரி நீர் நாடன் - காவிரிநீர் நாட்டையுடைய செங்கட் சோழன், நண்ணாரை-பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க் களத்தில், திண்தோள் - வலிய தோளையுடைய, மறவர்-வீரர்கள், எறிய - (வாளால்) எறிதலால், திசைதோறும்-திசைகள்தோறும், பார் இல்-பூமியில், பைந்தலை - கரிய தலைகள், புரள்பவை-புரளுவன, நன்கு எனைத்து உம்-மிகவும், பெண்ணை தோட்டம் - பனங்காட்டில், பெருவளி - பெருங் காற்று, புக்கது அற்று-புக்க செயலையொத்தன எ-று.

பசுமை - கருமைமேல் நின்றது. அம் சாரியை. புக்கதற்று என்பது புக்கற்று என்றாயது. பனந்தோட்டத்திற் பெருவளி புக்கால் காய்கள் உதிர்ந்து புரளுமாறு போலத் தலைகள் புரண்டன என்க. (உச)

உரு. மலைகலங்கப் பாயு மலைபோ னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து-பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், மேவாரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், மலை கலங்க-மலைகள் கலங்க, பாயும்-பாய

நின்ற, மலைபோல் - மலைகள்போல, நிலைகொள்ளா - நிலைகொண்டு, குஞ்சரம் பாய - யானைகள் பாய்தலால், கொடி-(அவற்றின் மிசை கட்டப்பெற்ற) கொடிகள், எழுந்து-மேல் எழுந்து, பொங்குபு - விளங்காநின்று, வானம் - வானத்தை, துடைப்பனபோன்ற - துடைப்பனவற்றை யொத்திருந்தன எ-று.

மலைகலங்கப் பாயுமலைபோல் என்றது இல்பொருளுவமம். கொடிதுடைப்பன போன்ற என்க. (உரு)

உசு. எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவ
லைவாய் வயநாகங் கவ்வி விசும்பிவருஞ்
செவ்வா யுவணத்திற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர்நாட்டை யுடைய செங்கட் சோழன், தெவ்வரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், எ வாய் உம் ஓடி - எவ்விடத்தும் சென்று, வயவர் - வீரர்கள், துணித்திட்ட-துணித்த, கை - கைகளை வாய் இல்-(தமது)வாயில், கொண்டுஎழுந்த-கவ்விக் கொண்டு மேலெழுந்த, செம் செவி-சிவந்த செவிகளை யுடைய, புல் சேவல் - புல்லிய பருந்தின் சேவல்கள், ஐவாய்-ஐந்துவாயை யுடைய, வயம் நாகம்-வலியையுடையபாம்பை, கவ்வி-கவ்விக் கொண்டு, விசும்பு இவரும்-வானிலே பறந்து செல்லும், செம்வாய் - சிவந்த வாயையுடைய, உவணத்தில்-கருடனைப் போல, தோன்றும்-தோன்று நிற்கும் எ-று.

புன்மை-புற்கென்ற நிறம். உவணத்தில் என்புழி இல் ஒப்புப்பொருட்டு. (உசு)

உஎ. செஞ்சேற்றுட் செ.ல்யானை சீறி மிதித்தலா
லொண்செங் குருதிக டொக்கீண்டி நின்றவை
*பூநீர் வியன்றமிடாப் போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர்நாட்டை யுடைய செங்கட் சோழன், மேவாரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், செம் சேறு உள்-(உதிரத்தாற் சேறுபட்ட) செஞ்சேற்றில், செல் யானை - செல்லுகின்ற யானைகள், சீறி மிதித்தலால் - வெகுண்டு மிதித்தலால் (குழிந்த இடங்களில்), தொக்கு ஈண்டி நின்றவை-ஒருங்கு தொக்குநின்ற, ஒள் - ஒள்ளிய, செம் குருதிகள்-சிவந்த வுதிரங்கள், பூ வியன்ற - செம் பூக்களை யாக்கிய, நீர்மிடா - நீர்மிடாவை, போன்ற - ஒத்தன எ-று.

குழிந்த இடங்களில் என்னுஞ் சொற்கள் அவாய் நிலையான் வந்தன. பூநீர் வியன்ற மிடா - செம்பூக்களையுடைய நீரினையுடைய அகன்றமிடா எனினும் ஒக்கும். தொக்கு ஈண்டி-ஒரு பொருளன. (உஎ)

உஅ. ஓடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை † வாளார் பிறங்கிய ஞாட்பினுட்
கேடகத்தோ டற்ற தடக்கைகொண் ‡ டோடி
யிகலன்வாய்த் § துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றோன்றும் புனனாடன்
னண்ணாரை யட்ட களத்து.

*பூவியன்ற நீர்மிடா என்று பாடங் கொள்ளுதல் வேண்டும்.

† வாளர் என்றும், ‡ ஓரி இகலனவாய் என்றும், § வாய்துற்றிய என்றும் பாடம்.

7/174

(பதவுரை) புனல்நாடன் - நீர்நாட்டையுடைய செங்கட் சோழன், நண்ணாரை-பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், ஓடா மறவர் - புறங்கொடாத வீரர்கள், உருத்து-கோபித்து, மதம்செருக்கி-களிப்பால் மிகுந்து, பீடு உடை - பெருமையையுடைய, வாளார் - வாளேந்தினவராய், பிறங்கிய-போர்செய்த, ஞாட்பின்உள்-போரின்கண், கேடகத்தோடு அற்ற-கேடகத்தோ டறுபட்ட, தட கை - நீண்ட கைகளை, கொண்டு ஓடி-கொண்டுசென்று, இகலன்-ஓரிகள், வாய்துற்றிய-(தமது) வாயிற் கவ்விய, தோற்றம் - காட்சி, அயலார்க்கு - அயலில் நின்றவர்க்கு, கண்ணாடி காண்பார் இல்-கண்ணாடி காண்பாரைப்போல, தோன்றும் - தோன்று நிற்கும் எ - று.

பிறங்குதல் போர்செய்தலை யுணர்த்திற்று. அயலார்க்குத் தோன்றும் என்க. (உஅ)

உகூ. கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
வீற்றுவீற் றோடு மயிலினம்போ - னாற்றிசையுங்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து.

(பதவுரை)செம்கண்-சிவந்த கண்களையும்,சினம்-வெகுளி யையுமுடைய, மால்-செங்கட்சோழன், பொருத களத்து- போர்செய்த களத்தில், கடிகா இல் - மரங்கள் செறிந்த சோலையில், காற்று உற்று எறிய-காற்று மிக்கு எறிதலால், வெடிபட்டு - அஞ்சி, வீற்று வீற்று ஓடும் - வேறு வேறாக ஓடும், மயில் இனம்போல் - மயிலின் கூட்டம்போல், நால் திசை உம் - நான்குதிசையிலும், கேளிர் இழந்தார் - கொழு நரை யிழந்த மகளிர், அலறுப-அலறா நிற்பர் எ-று.

வீறு-வேறு; 'சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்' எனப் புறத்தில் வருவது காண்க. செங்கண்மால் என

இயைத்துப் பெயராக்குதலும் ஆம். நாற்றிசையும் அலறுப என்க. அலறுப - பலர் பால் முற்று. (உ௧)

௩௰. மடங்க வெறிந்து மலையுருட்டு நீர்போற்
றடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கு
*மடங்கா மறமொய்ம்பிற் செங்கட் சினமா
லடங்காரை யட்ட களத்து.

(பதவுரை) மடங்கா-மடங்குதலில்லாத, மறம்-மறத்தினையுடைய, மொய்ம்பு இன் - மார்பினையும், செம் கண்-சிவந்த கண்ணினையும்,சினம்-கோபத்தையும் உடைய, மால்-செங்கட் சோழன், அடங்காரை - பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், மலை மடங்க எறிந்து - மலைகள் மறிய எறிந்து, உருட்டும் நீர்போல் - (அம் மலைகளை) உருட்டுகின்ற வெள்ளத்தைப்போல, தடம்கொண்ட-பரந்த, ஒள் குருதி-ஒள்ளிய உதிர வெள்ளம், கொல்களிறு-கொல்லப்பட்ட யானைகளை, ஈர்க்கும்-இழுத்துச் செல்லாநிற்கும் எ-று.

மறம் மொய்ம்பு-முறையே வீரமும் வலியும் எனினும் பொருந்தும். மடங்கல் என்னும் பாடத்திற்குச் சிங்கம் போல என்றும், மடங்குதல் அல்லாத என்றும் பொருள் கொள்ளலாகும். கொல்களிறு - கொலைத்தொழிலையுடைய யானை எனினும் அமையும். செங்கண் என்பதற்கு மேலுரைத் தமை காண்க. (௩௰)

௩௧. ஓடா மறவ ரெறிய நுதல்பிளந்த
கோடேந்து கொல்களிற்றுக் கும்பத் தெழிலோடை
மின்னுக் கொடியின் மிளிரும் புனனாட
னொன்னாரை யட்ட களத்து.

---

* மடங்கன் மறமொய்ம்பின் என்றும் பாடம்.

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டை யுடைய செங்கட் சோழன், ஒன்னாரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க்களத்தில், ஓடா மறவர் - புறங் கொடாத வீரர்கள், எறிய - வேலினை யெறிதலால், நுதல் பிளந்த - நெற்றி பிளந்த, கோடு ஏந்து - கொம்பினை யேந்திய, கொல்களிறு- கொல்லும் யானையின், கும்பத்து - மத்தகத்தில் (கட்டிய), எழில் ஓடை- அழகிய பட்டம், மின்னுகொடி இல்-(முகிலின் கண்) மின்னற்கொடிபோல, மிளிரும்-விளங்காநிற்கும் எ-று.

பிளந்தகளிறு, ஏந்துகளிறு எனத் தனித்தனி முடிக்க. பிளந்த-பிளக்கப்பட்ட. மின்னுக்கொடி-'தொழிற் பெயரியல' என்பதனான் உகரம் பெற்றது. (௩க)

௩உ. மையின்மா மேனி நிலமென்னு நல்லவள் [ந்த
செய்யது போர்த்தாள் போற் *செவ்வந்தாள்-பொய்தீர்
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து.

(பதவுரை) பூதார்-பூமாலையினையும், முரசு இன்-வெற்றி முரசினையு முடைய, பொய்தீர்ந்த-வறத்தலில்லாத, பொரு-(கரையொடு) மோதும், புனல் - நீரினையுடைய, நீர்நாடன்-காவிரி நாட்டையுடைய செங்கட் சோழன், காய்ந்தாரை-வெகுண்ட பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், மை இல் - குற்றமில்லாத, மாமேனி - அழகிய மேனியை யுடைய, நிலம் என்னும் நல்லவள் - பூமி என்னு மாது, செய்யது - சிவந்த போர்வையை, போர்த்தாள் போல் - போர்த்தவள் போல, செவ்வந்தாள் - செந்நிறமெய்தினள் எ-று.

---

* செவ்வென்றாள் என்றும் பாடம்.

நிலத்தை மகடூஉவாகக் கூறுதல் மரபு. 'செல்லான் கிழவனிருப்பினிலம் புலந் - தில்லாளினூடிவிடும்' என்பதும் சிந்திக்கற் பாலது. செய்யது-குறிப்பு வினைப்பெயர். செவ் வந்தாள்-செவ்வரல் பகுதி. செவ்வென்றூர் எனின் செவ் வென் பகுதி. முரசினையுடைய நாடன் என்க. பொய் தீர்ந்த என்பதனை, 'வானம் பொய்யாது' என்புழிப் போலக் கொள்க. காவிரியின் பொய்யாமையை 'கரியவன் புகையி னும்.........................ஓவிறந்தொலிக்கும்' என்னும் நாடு காண்காதையடிகளா னறிக. (கூஉ)

கூகூ. பொய்கை யுடைந்து புனல்பாய்ந்த வாயெல்லா
நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோ
லைதிலங் கெஃகி னவிரொளிவா டாயினவே
கொய்சுவன் மாவிற் கொடித்திண்டேர்ச் செம்பியன்
றெவ்வரை யட்ட களத்து.

(பதவுரை) கொய்-கத்திரித்த, சுவல்-புறமயிரையுடைய, மாஇன்-குதிரையினையும், கொடி-கொடிகட்டிய, திண்தேர்-வலிய தேரினையுமுடைய, செம்பியன் - செங்கட்சோழன், தெவ்வரை - பகைவரை, அட்டகளத்து - கொன்ற போர்க் களத்தில்,பொய்கை உடைந்து-பொய்கைக்கரையுடைதலால், புனல்பாய்ந்த-(அதன்கண்ணுள்ள) நீர்பாந்த, வாய் எல்லாம்-இடமெல்லாம், நெய்தல் - (மலர்ந்த) நெய்தற் பூக்களின், இடை இடை - நடுவே நடுவே, வாளைபிறழ்வனபோல்-வாளை மீன்கள் பிறழ்தல்போல, ஐது இலங்கு-அழகிதாய் விளங்கா நின்ற, எஃகுஇன் - வேலொடு, அவிர் ஒளி - விளங்கும் ஒளியையுடைய, வாள்தாயின - வாள்பரந்தன எ-று.

ஐது அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று எச்சமாய் இலங்கு என்னும் காலங்கரந்த பெய

ரெச்சங் கொண்டது. ஐ பகுதி, து ஒன்றன்பால் விகுதி. தாயின் அஃறிணைப்பலவின்பாற் படர்க்கை இறந்தகால் வினை முற்று - தாவு பகுதி, இன் இடைநிலை, வகரம் யகரமாய்த் திரிந்தது. (நுங)

நுச. இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச்சோர்ந் துக்க
*குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்திற்
றொடரொடு கோணாய் புரையு மடர்பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து.

(பதவுரை) அடர் - தகட்டுவடிவாகிய, பைம்பூண்-பசிய அணிகலத்தினையுடைய, சேய்-செங்கட் சோழன், பொருது அட்ட - போர்செய்து கொன்ற, களத்து - களத்தின்கண், இணரிய ஞாட்பின் உள் - தொடர்ந்து நெருங்கிய போரில், ஏற்று எழுந்த - எதிர்த்தெழுந்த, மைந்தர் - வீரர்கள், சுடர் இலங்கு - ஒளிவிளங்காநின்ற, எஃகம் - வேல்களை; எறிய- எறிதலால், சோர்ந்துஉக்க - சரிந்துசிந்திய, குடர்கொண்டு- (வீரர்களின்) குடர்களைக் கவ்விக்கொண்டு, வாங்கும்-இழுக் கும், குறுநரி - குறுநரிகள், கந்துஇல் - தூணிலே (கட்டப் பட்ட), தொடர்ஒடு-சங்கிலியோடு (நின்ற), கோணாய் புரை யும் - கோணாய்களை யொக்கும் எ-று.

இணரிய - இணர் பகுதி, இன் இடைநிலை கடைகுறை ந்து நின்றது. கோணாய் வேட்டமாடும் நாய். குறு நரி- நரியின் ஓர்வகை; 'குறு நரிபட்டற்றால்' என்பது கலி. அடர்- தகடு. (நுச)

---

*குடர் கொடு என்றும் பாடம்.

௩௫. செவ்வரைச் சென்னி யரிமானோ டவ்வரை
யொல்கி யுருமிற் குடைந்தற்றால் - மல்கிக்
கரைகொன் றிழிதரூஉங் காவிரி நாட
னுரைசா லுடம்பிடி மூழ்க வரசோ
டரசுவா வீழ்ந்த களத்து.

(பதவுரை) மல்கி - மிகுந்து, கரைகொன்று - கரைகளையழித்து, இழிதரும் - செல்லும், காவிரிநாடன் - காவிரிநாட்டையுடைய செங்கட்சோழனது, உரைசால் - புகழமைந்த, உடம்பிடி மூழ்க - வேல்கள் குளிப்ப, அரசு ஓடு - அரசரோடு, அரசு உவா - (பட்டம் பெற்ற) யானைகள், வீழ்ந்தகளத்து - மறிந்து வீழ்ந்த களத்தின்கண் (அங்ஙனம் விழுந்தமை), செம்வரை - செவ்விய மலையின், சென்னி - உச்சியிலுள்ள, அரிமான் ஓடு - சிங்கத்துடன், அவரை - அந்தமலை, ஒல்கி - தளர்ந்து, உருமிற்கு - இடியேற்றிற்கு, உடைந்தற்று - அழிந்தாற்போலும் எ-று.

அரசர்க்கு அரிமானும் யானைக்கு மலையும் உவமம். உடைந்தால் என்பது உடைந்து என நின்றது. (௩௫)

௩௬. ஓஒ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாண்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

(பதவுரை) காவிரி நாடன் - காவிரி நாட்டையுடைய செங்கட் சோழன், கழுமலம் - கழுமலமென்னும் ஊரினை. கொண்ட நாள் - கைக்கொண்ட நாளில், புனல்நாடன் -

அவன், மேவாரை-பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க்களத்தில், மா உதைப்ப-குதிரைகளுதைத்தலால், மாற்ரூர் - பகைவரின், குடைஎல்லாம் - குடைகளெல்லாம், கீழ் மேல் ஆய்-கீழ்மேலாகி, ஆ உதை-ஆனிரைகளா லுதைக்கப் பட்ட, காளாம்பி போன்ற - காளாம்பியை யொத்தன, உவமன் - அவ்வுவமை, உறழ்வுஇன்றி - மாறுபா டில்லாமல், ஒத்தது-பொருந்தியது எ-று.

முதலடி முற்றுமோனை. ஓ வென்பது சிறப்புணர்த்திற்று. புனனுடன் என்பது சுட்டு. உவமன் என்புழிச் சுட்டு வருவிக்க. கழுமலம் சோ நாட்டகத்ததோர் ஊராதல் வேண்டும். 'நற்றேர்க் குட்டுவன் கழுமலம்' என்பதும் காண்க. (௩௬)

௩௭. அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப-வெத்திசையும்
பௌவம் புணரம்பி போன்ற புனனுடன்
றெவ்வரை யட்ட களத்து.

(பதவுரை) புனல்நாடன் - நீர்நாட்டை யுடைய செங்கட் சோழன், தெவ்வரை - பகைவரை, அட்ட களத்து-கொன்ற போர்க்களத்தில், அரசர்பிணம் - அரசர் பிணங்கள், கான்ற-சிந்திய, நெய்த்தோர்-உதிரவெள்ளங்கள், எ திசை உம்-எல்லாத் திசைகளிலும், முரசுஒடு - முரசினோடு, முத்து உடை-முத்தினையுடைய, கோட்ட - கொம்புகளையுடைய, களிறு-யானைகளை, ஈர்ப்ப-இழுப்ப (அவைகள்), பௌவம்-கடலையும், புணர்-(அக்கடலைச்) சேர்ந்த, அம்பி-மரக்கலங்களையும், போன்ற - ஒத்தன எ-று.

அரசரின் உடல் மறிந்து கிடப்பதனை அரசர் பிணம் என்றூர். முரசினையும் களிற்றினையும் ஈர்ப்ப என்க. அவை

யெனச் சுட்டு வருவிக்க. கோட்ட - குறிப்புப் பெயரெச்சம். (௩எ)

௩அ. பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்
துருமெறி பாம்பிற் புரளுஞ்-செருமொய்ம்பிற்
பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்
றுன்னாரை யட்ட களத்து.

(பதவுரை) செரு மொய்ம்பு இன்-போர் வலியினையும், பொன் ஆரம் - பொன்னாற்செய்த ஆரத்தை யணிந்த, மார்பு இன் - மார்பினையும், புனைகழல்கால் - கட்டிய வீரக்கழலினை யுடைய காலினையுமுடைய, செம்பியன்-செங்கட் சோழன், துன்னாரை - பகைவரை, அட்ட களத்து - கொன்ற போர்க் களத்தில், பருமம்-பண்ணினையும், பணை - பருத்த, எருத்து இன் - பிடரினையு முடைய, பல் யானை-பல யானைகள், புண் கூர்ந்து-(படைகளால்) புண் மிகுதலால், உரும் எறி - இடியேற்று லெறியப் பட்ட, பாம்பு இன் - பாம்பு போல, புரளும் - புரளா நிற்கும் எ-று.

பருமம்-ஒப்பனை. பாம்பின்-ஐந்தனுருபு ஒப்புப் பொருட்டு. எருத்தின் முதலியவற்றில் சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையாது வருதலை 'மெல்லெழுத்து மிகுவழி' என்னுஞ் சூத்திரத்து 'மெய்பெற' என்பதனாற் கொள்ளுப.(௩அ)

௩௯. மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுட்
புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனாடன்
வஞ்சிக்கோ வட்ட களத்து.

(பதவுரை) புனல் நாடன்-நீர் நாட்டையுடைய செங்கட் சோழன், வஞ்சி கோ - வஞ்சி யரசனாகிய சேரனை, அட்ட

களத்து - கொன்ற போர்க்களத்தில், மைந்து - (வீரர்கள் தங்கள்) மறவலிகள், கால் யாத்து-காலைத் தளை செய்தலால், மயங்கிய-போகாது மிடைந்த, ஞாட்பின் உள்-போரின்கண், கால் புய்ந்து போகி - காம்பு பறிந்து போகப்பட்டு, புலால் முகந்த - செந்தசையை முகந்த, வெண்குடை - வெள்ளைக் குடைகள், பஞ்சி பெய்-செம் பஞ்சுக் குழம்பு பெய்த, தாலம் ஏ போன்ற-தாலத்தையே யொத்தன எ-று.

தாலம்-வட்டில். புய்ந்து-புய் பகுதி. 'புய்த்தெறி நெடுங் கழை' என்பது புறம். (௩௯)

௪௰. வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோ
லெல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த - பல்வேற்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.

(பதவுரை) பல்வேல் - பல வேலினையும், பணைமுழங்கு-முரசு முழங்காநின்ற, போர் தானை-போர்ச்சேனையையும், சினம்-கோபத்தையு முடைய, செங்கண்மால்-செங்கட்சோழன், கணைமாரி - அம்பு மழை, பெய்த களத்து - பெய்த போர்க்களத்தில், வெள்ளி - வெள்ளியாற் செய்த, வெள் நாஞ்சிலால்-வெள்ளிய கலப்பையால், ஞாலம் உழுவனபோல்-நிலத்தை யுழுதல்போல, களிறு எல்லாம் - யானைகளெல்லாம், நிலம் சேர்ந்த - (முகங் கவிழ்ந்து) நிலத்தைச் சேர்ந்தன எ-று.

யானையின் வெண்கோடுகள் வெள்ளிநாஞ்சில் போன்றன. மாரி பெய்தவழி நிலம் உழுதலாகிய செயல் நினைப்பிக்கப்பட்டது. (௪௰)

சக. வேனிறத் திங்க வயவரா லேறுண்டு
காணிலங் கொள்ளாக் கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

(பதவுரை) பாடுஆர் - ஒலி நிறைந்த, இடி-இடியேறு போன்ற, முரசு இன் - முரசினை யுடைய, பாய் புனல் - பாய்ந்து செல்லும் நீரினையுடைய, நீர்நாடன் - காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன், கூடாரை - பகைவரை, அட்டகளத்து-கொன்ற போர்க்களத்தில், வேல்-வேலானது, நிறத்து இங்க-மார்பிலழுந்த, வயவரால்-வீரரால், ஏறுண்டு-குத்தப்பட்டு, கால் நிலம் கொள்ளாது - கால்கள் தளர்ந்து, கலங்கி - வீழ்ந்து, செவிசாய்த்து - செவிகளைச் சாய்த்து (யானைகள் கிடத்தல்), மா நிலம் - பெரிய நிலமகள், கூறும்- உபதேசிக்கும், மறை-உபதேச மொழியை, கேட்பபோன்ற- கேட்டலை யொத்தன எ-று.

மறை - மந்திரம், மறைந்த பொருளுடையது. செவி சாய்த்து என்பதனால் அது கேட்கு முறைமையுணர்த்தப் பட்டது. அவாய்நிலையாற் சில சொற்கள் வருவிக்கப் பட்டன. (சக)

களவழி நாற்பது

முற்றும்

களவழி நாற்பது

பாட்டு முதற்குறிப் பகராதி

[எண் - பக்கவெண்]

அஞ்சனக்	சு	செவ்வரைச்	உஎ
அரசர்	உஅ	ஞாட்பினு	உ
ஆர்ப்பெழுந்த	கந	திண்டோண்	ககூ
இடைமருப்பின்	கரு	தெரிகணை	ச
இணரிய	உசு	நளிந்த	கச
இருசிறக	கசு	நாற்றிசை	ரு
இருநிலஞ்	கஎ	நாண்ஞாயி	க
இணைவே	கசு	நிரைகதிர்	கக
உருவக்கடுங்	ச	பருமவினை	கஉ
எவ்வாயு	உய	பருமப்பணை	உகூ
எற்றிவயவ	கஅ	பல்கணை	அ
ஒழுக்குங்	ந	பொய்கை	உரு
ஒஒஉவம	உஎ	மடங்க	உந
ஓடாமறவரு	உக	மலைகலங்க	ககூ
ஓடாமறவரெறி	உந	மேலோரை	அ
ஓவாக்கணை	ய	மையின்	உச
கடிகாவிற்	உஉ	மைந்து	உகூ
கவளங்கொள்	கக	யானைமேல்	எ
கழுமிய	கூ	வெள்ளி	நய
கொல்யானை	கஉ	வேனிறத்	நக
செஞ்சேற்றுட்	உக		

91174

அருஞ்சொல்லகராதி

[எண் - செய்யுளெண்]

அம்பி	௩௭	குருதி	௧
அரிமன்	௩௫	கேளிர்	௨௧
ஆடியல்	௨௨	கொண்மூ	௨௩
இகலின்	௨௮	கொய்	௩௩
இங்கல்	௨௧, ௪௧	கோடு கீழ்	௨
இங்குலிகம்	௭	சிரல்	௫
இவரும்	௧௯	சுடர்	௬
உடற்றியார்	௧௮	சுவல்	௩௩
உயங்கும்	௰	செருமொய்ம்பு	௧௩
உறி	௯	ஞாட்பினுள்	௨, ௧௧, ௧௪, ௨௮, ௩௪, ௩௧
உருத்து	௨௮	ஞாலஞ்சேர்	௨
உருமெறி	௧௩, ௩௮	ஞாலம்	௪௰
உருமெறிந்து	௯	தச்சன்	௧௫
உருவ	௪	தடறு	௧௮
உருவிழந்து	௫	தப்பியார்	௧
உழக்கி	௩	திமில்	௧௮
உவணம்	௨௯	துப்பு	௧
எஃகம்	௫	துளங்கினவாய்	௨௧
எருத்தின்	௩௮	துன்னுரை	௩௮
எருவை	௨௰	தூறு	௯
எறுண்டு	௪௧	தெரியல்	௨௪
ஒல்கி	௰, ௧௨, ௩௫	தெவ்வரை	௨௪, ௩௩, ௩௭
ஒல்கிய	௨௧	நண்ணுரை	௨௪, ௨௮
ஒளிறு	௨௨	நளிந்த	௧௮
கந்தில்	௩௪	நாஞ்சில்	௪௰
கடவி	௧௯	நாள்ஞாயிறு	௧
கழுமிய	௧௧	நூற	௧௩
களிறு	௧	நெய்த்தோர்	௩௭
கார்த்திகை	௧௭	நெரிதர	௮
குக்கில்	௫	நோரை	௨௰
குஞ்சரம்	௨௫		

நீர்தூம்பு உ
பரிதி ச
பருமம் கசு, ஙஅ
பிறங்க சு, கரு
பிறங்கிய உஅ
புல்லாரை ச
பூவல் கங
பைந்தலை உச
பொருநரை எ
பௌவம் ஙஎ
மாய்ந்து க
மாய்ப்ப அ
முருக்கி ச, கரு
மொய்ம்பில் ஙய
வயம் உசு
வயவர் க
வரை கங, உங
விளிந்தார் கஅ
வெடிபட்டு உகூ
வேழம் கஉ

71174

C. Munisawmy Mudaliar & Sons, Printers, Madras.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்

பதினெண் கீழ்க்கணக்கு

௧ இனியவை நாற்பது

இஃதியற்றியவர் பூதஞ் சேந்தனார். இன்னது இன்னது இனிதென்றுரைக்கும் நாற்பது வெண்பாக்களை யுடையது. இதன்கண் பழைய பொழிப்புரையினை அப்படியே சேர்த்தும் திரு. வா. மகாதேவ முதலியாரவர்கள் எழுதிய பதவுரை, விளக்கவுரையினைச் சேர்த்துமிருக்கின்றன. உயர்ந்த பதிப்பு. இதன் விலை அணா 5.

௨ திணைமொழி ஐம்பது

இஃதியற்றியவர் கண்ணன் சேந்தனார். ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாப் பாடிய ஐம்பது வெண்பாக்களுடையது. இதன்கண் பழைய பொழிப்புரையும், புதிதாக வெழுதிய அருஞ்சொற்பொருளகராதியும் சேர்த்திருக்கின்றன. அணா 5.

௩ நாலடியார்

இது திருக்குறளைப் போல நீதிகளை முறையாகக் கூறுவது. தமிழ் கற்க விரும்புவார்க்குப் பயன் படும்படியாகச் சென்னை, திரு. வா. மகாதேவமுதலியாரவர்கள் எழுதிய உரையுடன் வெளிவந்துளது. திருத்தமான உயர்ந்த பதிப்பு விலை ரூபா 1

௪ ஷை மாணவர் பதிப்பு விலை அணா 12

௫ திருக்குறள் மூலம்

இதன் குறுகிய வடிவும், செவ்வியமைப்பும், தூய அச்சுப் பொறிப்பும் கண்டார் கண்ணைக் கவர்ந்து முன்னரே தம்மிடம் பல பதிப்புக்கள் இருப்பினும் இப்பதிப்பு இல்லாதிருப்பது குறையேயாகுமென்ற மனவெழுச்சியினை உண்டாக்கவல்லன. வழுவழுப்பான கடிதம், உயர்ந்த கலிக்காக் கட்டடம். அணா 8

விலையுயர்ந்த வேறு கடித (Antique Paper)த்தில் பதித்து (Rexin) ரெக்சின் துணியில் பஞ்சுவைத்துக் கட்டப்பட்டுள்ள சேர்த்தியான பதிப்பு விலை ரூபா 1–8

குறிப்பு: இன்னா ௪௰, கார் ௪௰, ஐந்திணை ௫௰, திணைமாலை ௱௫௰, ஐந்திணை ௭௰ முதலிய நூற்கள் அச்சிலிருக்கின்றன.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

தலைமை நிலையம்: திருநெல்வேலி.

கிளை நிலையம்: 306 லிங்கசெட்டி தெரு, சென்னை.